# செல்வமே; கழகத்தின் தியாகச் செம்மலே!



**செ**ல்வமே, கழகத்தின் செப்பரிய
செம்மலே
கல்நெஞ்சும் கரைந்துருகக்
காரணமே இல்லாமல்
செல்லுமிடம் ஒருவர்க்கும்
செப்பாமல் சென்றவரே!
நல்லவராய் அரசியலில்
நற்பெயர் எடுத்தவரே!

செல்லாமல் பதவிகளைத்
தீண்டாமல் விடுத்தவரே!
எல்லாமே தொண்டென
இளங்கோபோல்
இருந்தவரே!
எல்லோர்க்கும் இனியவரே,
இயக்கத்தின் முனிவரே!

பொல்லார்க்கும் உகந்தவராய்ப்
பொருந்தார்க்கும்
உற்றவராய்க்
கல்லார்க்கும் உரியவராய்க்
கற்றோர்க்கு ஒத்தவராய்
வல்லார்க்கு வணங்காராய்
வம்பருக்கு இணங்காராய்த்
தொல்வேந்தர் வழியிலே
தூயவராய்த் துலங்கியோரே!

இல்லார்க்குப் பரிந்துதவ
எப்போதும் முனைந்தவரே!
புல்லினும் மென்மையாய்ப்
பூவிதழின் தண்மையாய்
நல்லிதழ்கள் நடுவிலே
நறுமுறுவல் பூப்பவரே!
சொல்லூறப் பேசியே
சுவையூறப் பொலிபவரே!

வில்லம்பு வாள்வேல்கள்
வீசியே பாய்ந்தாலும்
சொல்லம்பால் யாவையும்
துண்டாக்கி விட்டவரே!

முல்லைமலர் போல்உமது
முகத்திலெழும்
முறுவலுக்கு
இல்லையிங்கே ஈடுதான்,
இனிமையின் பீடுதான்!

தொல்லையொன்றும் பிறருக்குத்
துரும்பளவும்
தாராமல்
எல்லையென்றும்
ஒருபோதும்
எள்ளளவும் மீறாமல்
சில்லரை வழியிலே
செல்லாத செல்வமே!

தில்லையென்றும்
பழனியென்றும்
சீரங்கம் திருமலையும்
செல்லவே நினையாத
திண்ணிய பகுத்தறிவு
வல்லமை பெற்றவரே,
வாய்மையைக் கற்றவரே!
வெல்லவே முடியாத
வெண்தாடிப் பெரியாரின
செல் வழி சிந்தித்தால்
சிறந்தவழி என்றவரே!

வல்லூறு திரிகின்ற
அரசியல் வானிலே
மெல்லிறகு வெண்புறாவாய்
மேலேறிப் பறந்தவரே!

அண்ணாவின் உள்ளத்தில்
அன்பாகப் பதிந்தவர்கள்
எண்ணற்றோர்
இயக்கத்தில் இருந்தாலும்
அண்ணாவின் உள்ளத்தில்

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

ஆழமாய்ப் பதிந்தவர்நீர்!
தண்ணீரும் காவிரியே,
தார்வேந்தன் சோழனே,
விண்ணேறும் சூரியன்போல்
வெளிச்சமாய் இருள்கடிந்த
அண்ணாவே எல்லாமென்று
அடிநாள்தொட்டு
இருந்தவரே!
பண்ணார்ந்த குடும்பத்துப்
பகலவனாய் ஒளிவிட்ட
கண்ணார்ந்த கலைஞரின்
கைப்பற்றிக் கருத்தொற்றி
அண்ணாந்து நடந்தவரே,
அகமெலாம் படர்ந்தவரே!

நுண்ணறிவோடு
அரசியல்
நுட்பங்கள் விளக்கியே
வண்ணமலர்ச் சோலையிலே
வாடாத மலராக
எண்ணமெலாம் மணம்பரப்பி
எழுதியநீர்
இல்லாமல்
திண்ணையது இன்றுவரை
சென்றமர ஒருவரில்லை!

அலைமோதும் கடலோரம்
அண்ணாவின் அருகிருக்கக்
கலைஞர்தாம் போய்விடக்
கழகத்தின் எதிர்காலம்
நிலையாக வளர்வதற்கு
நீர்பாய்ச்சும் தளபதியைத்
தலைமைதான்
ஏற்குமாறு
தக்கவழி சொன்னவரே!

மலைக்காமல் அவரிந்த
மாநிலம் ஆளுவதைத்
தலைநிமிர்ந்தே
வடபுலத்துத்
தருக்கருடன் மோதுவதைச்
சிலையாகிப் பார்த்தாலும்
சிலந்தியாய் எழுதுதற்கு
இலையிங்கே என்பதுவும்
இதயத்தைப்
பிழிகிறதே!
விலையேது நும்முடைய
வெளிப்படா உழைப்பிற்கு?

குலையாது சட்டமன்றக்
கூண்டிலே ஏற்றினாலும்
கலையாத வானம்போல்
கலங்காது நின்றவரே!
இலையான பேர்களை
எஃகாகி வென்றவரே!
தொலையாத வைரத்தைத்
தொலைத்தாலும்
பெற்றிடலாம்;
அலையாத நெஞ்சத்தின்
அரசனே உமையிழந்து
சிலையாகக் காணுகின்றோம்
சிந்தையில் பூணுகின்றோம்!

கழகத்தை விட்டுவிட்டுக்
கண்மணி மனையாளை
அழவிட்டு, எப்போதும்
அருமைமகள் கலங்கவிட்டு,
எழுச்சிதரும் முரசொலியை
ஏங்கவிட்டுத் தளபதிக்கு
அழுத்தமாய்த்
தந்ததோள் அகற்றிவிட்டு
உறவுகளை
விழுமிய நண்பர்களை
விம்மவிட்டுச் செல்வமே!
தழலிலே புகுந்தது
தாள வொண்ணாத் துயரன்றோ?

கலைஞரின் நெஞ்சிலே
கரையாமல் கமழ்ந்தவரே!
மலையாக உயர்ந்துள்ள
மாபெரும் இயக்கத்தின்
தொலையாத செஞ்சுடரே;
தொடமுடியா தென்றாலும்
நிலையாக ஒளிருவீர்;
நீங்காமல் ஓங்குவீர்;
சிலையாக அமர்ந்தாலும்
சிந்திக்க உணர்த்துவீர்,
அலையென்றும் தணிவதில்லை,
அனலென்றும் குளிர்வதில்லை
மலையென்றும் சாய்வதில்லை
வண்காவிரி ஓய்வதில்லை
கலைஞரின் உளங்கவர்ந்த
கருத்தூற்றுச் செல்வமே,
காலம்உமை நினைந்திடும்,
கழகமென்றும்
வணங்கிடும்!

# அழகிய உருவம்! அமைதியின் வடிவம்!

**க**ல்லுமே கரையு மே!உன்
கலைமுகம் கண்டால்! அச்சு
வெல்லமே உன்ப டைப்பு!
வெல்லுமே பகையை! வெள்ளை
முல்லையின் உள்ள மே!நம்
முத்தமிழ் அறிஞ ருக்குச்
செல்லமே! செல்வ மே! நீ
சென்றதேன் எம்மை விட்டே?

உரைநடை எழுத்துச் செல்வம்!
உயர்தரக் கருத்துச் செல்வம்!
தருவாகிப் பயன்வி ளைக்கும்
தமிழ்ச்செல்வம்! தாய்வ யிற்றில்
கருவான அறிவுச் செல்வம்!
கழகத்தின் கொள்கைச் செல்வம்!
திருவாரூர் கொடைய ளித்தத்
திராவிடச் செல்வம் நீதான்!

சத்தியம் உனது செல்வம்!
சமத்துவம் உனது செல்வம்!
முத்தமிழ் உனது செல்வம்!
“முரசொலி” உனது செல்வம்!
பத்தரை மாற்றுப் பொன்போல்
பண்பில்நீ உயர்ந்த செல்வம்!
சித்தத்தில் கலந்த எங்கள்
செல்வத்துட் செல்வம் நீதான்!

கல்வியிற் சிறந்த செல்வம்!
கட்டுரை வரைந்த செல்வம்!
சொல்வளம் மிகுந்த செல்வம்!
சுயமரி யாதைச் செல்வம்!
நெல்வயல் போலும் ஆற்றல்
நிறைந்தநற் செல்வம்! எங்கள்
“செல்வியின் செல்வ மான
செல்வமே” சென்ற தெங்கே?

முழுநிலா வெளிச்சக் கண்கள்
மூடிற்றோ! அந்தோ! அன்பைப்
பொழிகின்ற பார்வை எங்கே?
பூஞ்சிரிப் பெங்கே? மின்னும்
அழகிய உருவம் எங்கே?
அமைதியின் வடிவம் எங்கே?
மொழியுணர் வூட்டி வைத்த
“முரசொலிப் புதையல்” எங்கே?

தூண்டினார்! குற்றச் சாட்டு
சுமத்தினார்! சட்ட மன்றக்
கூண்டிலே ஏற்றி னார்!நீ
குறுநகை புரிந்து நின்றாய்!
தாண்டினாய் தடையை! அன்புத்
தலைவரை நெகிழ வைத்தாய்!
மூண்டதோர் எதிர்ப்பை யெல்லாம்
“முரசொலி”க் காக ஏற்றாய்!

நேர்எதிர் குணமாய், நீரும்
நெருப்புமாய் உடன்பி றந்தீர்!
நீரோடை தம்பி! கோப
நெருப்பன்றோ அண்ணன் மாறன்!
கூர்தீட்டும் அண்ணன் கோபம்!



குளிர்விக்கும் உன்றன் ஈரம்!
தூரம்நீ சென்றாய்! நெஞ்சில்
சுமைதாங்கி டாத பாரம்!

“கலைஞரின்” மறைவுக் குப்பின்
கண்ணீரைப் பொழிந்த வண்ணம்
தலையிலே அடித்துக் கொண்டு
“தளபதி” அழுத காட்சி
மலைகூட உருகும்! எங்கள்
மனம்என்ன ஆகும்? சோக
வலையிலே எம்மை வீழ்த்தி
வழியில்ஏன் பிரிந்தாய் ஐயா!

துளைத்ததே கொடிய செய்தி!
துடித்ததே இதயம் யாவும்!
வளைத்ததே துன்பம்! பொங்கி
வழியும்கண் ணீர்து டைத்தே
களத்தில்நீ விட்டுச் சென்ற
கடமையைத் தொடர்வோம்! எங்கள்
உளத்தில்நீ என்றும் வாழ்வாய்
உயிர்ப்பூவாய்!வணங்குகின்றோம்!

இலைமீது துளிகள் அல்ல!
ஏட்டில்நீ வடித்த சொற்கள்
மலைமீது கல்வெட் டைப்போல்
நிலையான வரலா றாகும்!
கலைமிளிர் எழில்மு கத்தைக்
கவின்மிகு புன்சி ரிப்பைச்
சிலையிலே ஒளிரக் கண்டு
தேற்றிக்கொள் வோம்!ம னத்தை!



**- கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி
### அக்டோபர் 11 (2002)



**இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

நாமக்கல் மேற்கு மாவட்ட

## மாணவர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி-ராஜீவ்காந்தி பங்கேற்பு!

நாமக்கல், அக். 11–

நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட கழக உலகம் கலைஞர் அரங்கம் தளபதி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வீரமணி, கோகுல், தமிழரசு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், நானா நானி கார்த்திக், தங்கமணி, ராகேஷ் கண்ணா, தீபன், லாவண்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, மாநில மாணவர் அணி செயலாளர் ராஜீவ்காந்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில்,

## பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி பி.எல்.ஏ.2, ஆலோசனைக் கூட்டம்!

### வீ.ஜெகதீசன் தலைமை! சுவை.சுரேஷ்-எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், அக்.11–

பெரம்பலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி BLA2, (வாக்குச் சாவடி நிலை முகவர்கள்), SIR(SPECIAL INDENSIND REVISION) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் வழக்கறிஞர் அணி மத்திய மண்டல பொறுப்பாளர் சுவை.சுரேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி BLA2,(வாக்குச் சாவடி நிலை முகவர்கள்)

SIR(SUSPENSION INDENSIND REVISION) ஆலோசனைக் கூட்டம், எளம்பலூர் சாலையில் உள்ள கர்ணம் சுப்பிரமணியம் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்,

குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் குன்னம் சி. இராஜேந்திரன், மாநில ஆதி திராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் ஆகியோர்

முன்னிலையில், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் காடூர் பா.கவியரசு வரவேற்புரையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வழக்கறிஞர் அணி மத்திய மண்டல பொறுப்பாளர் சுவை.சுரேஷ் கலந்து கொண்டு பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கெ. பழனிசாமி
### அக்டோபர் 11 (2016)



**தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**1960ஆம் ஆண்டு தர்காஸ் கண்டிகை என்ற தனது கிராமத்தில் கிளைக் கழகத்தை துவக்கி பதினேழு ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும் பின்னர், திருப்பெரும்புதூர் வட்டக் கழகப் பிரதிநிதியாகவும், தொடர்ந்து குன்றத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**1996ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**